ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2303/11 - 2022 ඔක්තෝබර් මස 26 වැනි බදාදා - 2022.10.26

2303/11 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 26 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/17/2019/D/513.
பிரதேச செயலாளரின் குறிப்பு இல.: KLP/LAND/07/19/17-II.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணி யிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

புத்தளம் மாவட்டத்தில், கல்பிட்டி பிரதேச செயலாளர் பிரிவில், டச்பே கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள 629 ஏ, கண்டல்குழி கிராமத்தில் நில அளவையாளர் நாயகத்தினால் 2022.09.28 ஆந் திகதியிடப்பட்ட பி.பி.பு. 5554 இலக்கம் கொண்ட முதற் சுவட்டு வரைபட இல. - , துண்டு இல. 1 எனக் காட்டப்பட்டுள்ள 0.0600 ஹெக்டயார் விஸ்தீரண முடைய பாதுகாப்பு அமைச்சின் தேவை குறித்து கண்டல்குழி கடற்படை கண்காணிப்பு பிரிவினை அமைப்பதற்கான காணித்துண்டின் விபரங்கள்:

**01. துண்டு இல. 01**

காணியின் பெயர்: இளம்பிள்ளை தோட்டம்; விபரம்: நில அளவையாளர் நாயகத்தினால் 2022.09.28 ஆந் திகதியிடப்பட்ட மு.பி.பு. 5554 இலக்கம் கொண்ட முதற் சுவட்டு வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள துண்டு இல. 01; உரிமை கோருவோர்: சாஹுல் ஹமீட் மொஹொமட் உவயிஸ், பிரதான வீதி, கண்டல்குழி; விஸ்தீரணம்: 0.0600 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 09 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு கல்பிட்டி பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்ததற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின்


*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

டி.ஏ.பி. தனன்சூரிய,
பிரதேச செயலாளர்,
கல்பிட்டி.

பிரதேச செயலகம்,
கல்பிட்டி,
2022, ஒற்றோபர் 17.

EOG 10 - 0224

---

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

பிரதேச செயலாளரின் இல.: DSM/PL/LAND/அகு/வி.மை/சு.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/8/2016/PC/530.

காணி எடுத்தற் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் 2022.08.01 ஆந் திகதிய, 2291/06 இலக்கம் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் பரிசீலனைத் திகதி மற்றும் நஷ்டஈடு பரிசீலனைத் திகதி 2022.08.31 ஆந் திகதி மு.ப. 10.00 மணி எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அது 2023.01.23 ஆந் திகதி மு.ப. 10.00 மணி எனத் திருத்தப்படல் வேண்டுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

எச்.எம்.சீ. ஏக்கநாயக்க,
பிரதேச செயலாளர்,
பல்லேபொல.

பிரதேச செயலகம்,
பல்லேபொல.

EOG 10 - 0225

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.